யாழ்ப்பாணம்.

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 25 தை 25 ஜ. ஆவ் 5 இதழ் 857

யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-2-84

## மின்வெட்டு இன்றுமுதல் நீக்கப்பட்டது!

### ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

நாடெங்கிலும் அமுலிருந்து வந்த மின்வெட்டு இன்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து மின்வெட்டு உடனடியாகத் தளர்த்தப்பட்டது.

மக்கள் அனைவரும் மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிப்பார்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேயே இந்த மின்வெட்டு தளர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கங்களில் நீரின் மட்டம் குறையுமானால் மீண்டும் மின்வெட்டு அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

### சர்வகட்சி மாநாடு: ஒரே குழுவில் தமிழ்க் கட்சிகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தமிழ்க்கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும்

(8-ம் பக்கம் பார்க்க)

● சர்வகட்சி மாநாட்டிலிருந்து

# சுதந்திரக் கட்சி விலகியதற்கு கூட்டணி காரணமல்ல!

### கொள்ளை

(சென்னை)

சென்னையிலுள்ள வீடு ஒன்றினுள் துப்பாக்கிகளுடன் நுழைந்த முகமூடி நபர்கள் 141 கிராம் எடையுள்ள தங்க நகைகளை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

## குற்றச்சாட்டுகளுக்கு 'அமிர்' மறுப்பு

(கொழும்பு)

**தமிழர் பிரச்னை பற்றிய சர்வகட்சி மாநாட்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெளியேறியதற்கு, தமிழர் விடுதலை கூட்டணியைக் காரணம் காட்டுவது சிறிதும் பொருத்தமற்ற செயலாகும். சர்வகட்சி மகாநாட்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெளியேறியதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எந்தவிதமான நடவடிக்கையும் இடம் கொடுக்கவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூற்று அர்த்தமற்றதாகும்.**

தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

"சர்வகட்சி மாநாட்டு செயலாளர் நாயகத்துக்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில், தமிழர் விடுதலை கூட்டணியின் சில நடவடிக்கைகளினால்தான் சர்வகட்சி மாநாட்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெளியேறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### "நாங்கள் ஏன் இந்தியா போனோம்"

"சர்வகட்சி மாநாடு முடிவடைந்த மூன்று தினங்களுக்குப் பின்னர் நானும் திருகோணமலை முன்னாள் எம். பி. திரு ஆர். சம்பந்தனும் சென்னைக்குச் சென்றோம். காரணம், எங்களது குடும்பம் அங்கு இருந்ததுதான்.

"பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்கள் அங்கு இருக்க வேண்டியிருந்தது.

"எவருடனும் ஆலோசனை பெறும் பொருட்டு நாங்கள் இந்தியா செல்லவில்லை.

"இந்தியாவில் நாங்கள் தங்கியிருந்தபோது, இந்தியப் பத்திரிகையாளர்களினால் கேட்கப்படும் கேள்விகளுக்கு நான் பதிலளிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பற்றியோ அல்லது பௌத்த மத குருமார்கள் பற்றியோ அவதூறாக நான் அறிக்கை எதுவும் வெளியிடவில்லை.

### "செய்தியாளர் கேள்வி"

"பௌத்தமத குருமார்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனரா என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு! முன்னரிலும் பார்க்க இப்பொழுது அவர்கள் எம் மீது அனுதாபம் கொண்டுள்ளனர் என்று பதிலளித்திருந்தேன்.

"குறிப்பாக தமிழ்நாடு மக்களும் பொதுவாக இந்திய மக்களும் ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் மக்கள் மீது பெரும் அனுதாபம்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி - காங்கிரஸ் நீண்டநேரம் பேச்சு!

(கொழும்பு)

கூட்டணித் தலைவர்களும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களும் நேற்று சந்தித்து நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

கூட்டத்தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் இடம் பெற்ற இச் சந்திப்பில் சர்வகட்சி மாநாட்டில் இதுவரை இடம்பெற்ற விடயங்கள் குறித்தும், அடுத்த குழுநிலை பரிசீலனையில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் இரண்டரை மணித்தியாலங்கள் பேச்சு நடத்தினர்.

இச் சந்திப்பில் கூட்டணி தரப்பில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு மு. சிவசிதம்பரம், கலாநிதி நீலன் திருச்செல்வம், திரு. இரா. சம்பந்தன், திரு. வே. முருகு ஆகியோர் கலந்து கொண்டனர். காங்கிரஸ் குழுவில் திருவாளர்கள் குமார் பொன்னம்பலம், மோதிலால்நேரு, ஏ. குமாரவேல், பி. மகேந்திரராசா, பி. கிருஷ்ணகுமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இ-கு)

## தமிழ்க் கட்சிகள் இன்று இ. தொ. கா. வைச் சந்திக்கும்

(கொழும்பு)

கூட்டணி, தமிழ் காங்கிரஸ் தமிழரசு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் குழு ஒன்று இன்று இ.தொ.கா. தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

சர்வகட்சி மாநாட்டின் அடுத்த குழுக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ள விடயங்கள் குறித்து ஆலோசிப்பதற்காகவே இவர்கள் இ. தொ. கா. தலைவர்களை சந்திக்கவிருப்பதாகத் தெரிகிறது. (கு)

## ரூ. 4 லட்சம் வழங்குமாறு யாழ். சமூகசேவைப்பகுதி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 540 குடும்பங்களைச் சேர்ந்த 20, 000பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க 4.00,000 ரூபாவை உடன் வழங்குமாறு யாழ். சமூகசேவைப் பகுதியினர் நேற்றுமுன்தினம் வானொலிச் செய்திமூலம் தலைமைப்பீடத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்:**

சரவெட்டியில் கன்பொலை குடியேற்றத்திட்டம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் குடியேற்றத்திட்டவாசிகள், பாதிப்படைந்துள்ளனர் இவர்களை அப்பகுதிப் பாடசாலைகளில் தங்குவதற்கு வசதியாக, பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு சமூக சேவைப் பகுதியினர். கல்வி அதிகாரியிடம் கோரியுள்ளனர்.

சாவகச்சேரித் தொகுதியில், பல இடங்களில், ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில், திட்டி, தாராக்குளம், பொம்மைவெளி, நாச்சிக்குண்டு, நாயன்மார்கட்டு, மருதடி, றக்கா ரோட், பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ் நகரிலுள்ள நீரடைப்பு மலகூட குழிகளுக்குமேலாக சில இடங்களில் வெள்ளம்பாய்ந்து கொண்டிருக்கிறது பல இடங்களில் நில மட்டத்திற்கு மேல வெள்ளம் ஏற்பட்டு கிணறுகள் நிரம்பியுள்ளன.

(8-ம் பக்கம்பார்க்க)

## கிளிநொச்சி செயலகம்: விவசாயிகள் முற்றுகை

(கிளிநொச்சி)

கண்டாவளையில் கடந்த வாரம் 500 ஏக்கரில் அருவிவெட்டி, வரம்புகளில் அடுக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் யாவும் வெள்ளத்தினால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளது.

முரசுமோட்டையில் மட்டும் 7,000 ஏக்கர் வயலில் நெற்கதிர்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கட்டாவளையில் மக்கள் கயிற்றுப் பாலம் மூலம் விடுக்கப்பட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி செயலகத்தில் நேற்றுக் காலை சுமார் 200 விவசாயிகள் முற்றுகையிட்டு தங்கள் பாதுகாப்புகுறித்து புகார் செய்தனர். உடனடியாக நிவாரண உதவிகள்தேவை என்று கோரிக்கை விடுத்தனர்.

## வெள்ள அகதிகளுக்கு ரூ. 11 லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை சமூக சேவைகள் திணைக்களம் ஒதுக்கியுள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் இரண்டு லட்சம் மக்களும் யாழ்ப்பாணத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய 'நஷனல்' குளிர் சாதனப் பெட்டி (இரண்டு கதவுகளுடன்) வட்டுக்கோட்டையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. வெற்றிவேலுப்பிள்ளை, 'ஈழநாடு, யாழ்ப்பாணம். 660

கொக்குவில் சந்தியிலிருந்து அரை மைல் உள்ளே 4½ பரப்பு காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: C. கருணபிரகாசம், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 662

Volks wagon கார் 1300 C C Paded stearing விற்பனைக்கு உண்டு. 18/4, சீனியர் ஒழுங்கை, கலட்டி, வண்ணார் பண்ணை. 659

மீசாலை பழைய ஸ்ரேசனடியில் 7½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.T. சுப்பிரமணியம், மீசாலை தெற்கு, மீசாலை. 635

சாவகச்சேரியில் பிரபலமான இடத்தில் பிடவை நிலையம் ஒன்று விற்பனைக்குண்டு. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 650 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 650

30 ஸ்ரீ தொடர் இலக்க நல்ல நிலையிலுள்ள புதிய இசுகு ஜேர்னிரக 'M' மொடல் 26 ஆசனங்கள் கொண்ட மினி பஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி குணபாலன் துரைசிங்கம், நெடியகாடு, வல்வெட்டித்துறை. 651

## தேவை

தமிழும் ஆங்கிலமும் ரைப்பிங் (Typing) தெரிந்த ஒருவர் தேவை. யாழ். நகர் அருகாமையில் வசிப்பவர் நல்லது. இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. 12ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 646, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 646

சேலைகள் பிறின்ரிங் பழகி வேலை செய்வதற்குப் பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். விரும்பியவர்கள் விண்ணப்பிக்கவும். வசந்தா ரெக்ரையில்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். 578

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் மில்ஸ், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

கேற் கிறில் செய்வதில் அனுபவமுள்ள வெல்டர் தேவை. 185/1, தர்க்கா வெல்டேஸ், இன்னர் வேலி, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 648

## காணவில்லை

ராஜா என்று அழைக்கப்படுபவரை 6-02-84 இலிருந்து காணவில்லை. இவரது உயரம் 4½ அடி. பொதுநிறம், சுருட்டைத் தலைமயிர். பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடைசியாக மண்ணிற கோடு போட்ட சாரமும், மஞ்சள்நிற T. சேட்டும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 9/1, உடையார் ஒழுங்கை, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 665

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 502

## வாடகைக்கு

கொழும்பில் இரண்டொரு நாட்கள் தங்கவேண்டுமா. வசதியான அறைகள், குறைந்த வாடகையில் உண்டு தொடர்பு கொள்க: 27, இராமகிருஷ்ண வீதி. வெள்ளவத்தை. தொலைபேசி: 587909 (647)

நாவலர் குறுக்குத் தெருவில் பத்து அறையுள்ள மாடி வீடு சகல வசதிகளுடன் உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: செல்வநாயகம், 150, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 649

**WANTED**

Wanted competent lecturers to teach, Computer Science—Basic—Cobol and I.D.P.M. courses. Apply immediately. Advt. No: 643 C/o Eelanadu Jaffna, (643)

## புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 6000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்று 15-2-84ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், புங்குடுதீவு-நயினாதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு. என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் (8-2-84 ஆகஇருந்த முடிவு திகதி 15-2-84 ஆக மாற்றப்பட்டுள்ளது)

என்பலப்பின் இடது பக்க மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
புங்-நயி பல.நோ கூ. சங்கம்,
663 புங்குடுதீவு.

108, BROWN ROAD, JAFPNA

**85 A/L வெப்ப இரசாயனம்**

ஆரம்பம் 11-02-84

ஆசிரியர்- சத்தீஸ் சனி / ஞாயிறு } 4-30 p.m

**84 A/L பௌதிக இரசாயனம்**

ஆரம்பம் 09-02-84 வியாழன் 5-45 p.m

**86 A/L** ஆரம்பம் 10-02-84 வெள்ளி 4-30 p.m

(658)

## ஈராண்டு நினைவஞ்சலி

**திருமதி கண்மணி துரைச்சாமி (சரசு)**

தோற்றம்: 5-12-1936 மறைவு: 30-1-1982

கணமெல்லாம் கண்கலங்க வைத்துவிட்டகன்ற அன்பு அன்னையே! உங்கள் இழப்பேற்பட்டுஈராண்டாகியும் எம்மனதை ஆற்ற முடியாதவர்களாய் உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்

பிள்ளைகள்: மனோ, தேவா, உதயன், பாமா மற்றும் மருமகன், பேர்த்தி, உற்றார், உறவினர்.

வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளை. (661)

## தேவை
## பெண் கணக்காளர்
### சர்வோதய யாழ். மாவட்ட நிலையம்

சர்வோதய யாழ். மாவட்ட நிலையத்திற்கு பெண் பிரதம கணக்காளர் ஒருவர் தேவை. கணக்காளருக்குரிய கல்வித் தகைமையுடையோரும் கணக்கு வைப்பதில் அனுபவமுடையோருமான 35 வயதிற்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

15-02-84க்கு முன் அமைப்பாளர், சர்வோதய யாழ். மாவட்ட நிலையம், புங்குடுதீவு என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தகுதியான வேதனமும் தங்குமிடம் உணவு வசதிகளும் அளிக்கப்படும். 629

### வீடு/காணி விற்பனவு

1. மானிப்பாய் இணுவில் றோட்டில் செல்லத்துரை பள்ளிக்கூடத்திற்கு அண்மையாக 2½ பரப்பில் 5 அறைகளுடன் வீடு.
2. ஊரெழு மேற்கு. பிள்ளையார் கோவில் வடக்கு வீதியாக 6½ பரப்புக் காணி.
3. யாழ். இரண்டாம் குறுக்குத்தெருவில் 1½ பரப்புக் காணி.

உங்கள் மூலதனத்திற்கு வருடமொன்றிற்கு

**26% தொடக்கம் 30% வரை**

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபா ஆயிரம் (ரூபா 1000/-)

விபரங்களுக்கு;

JAFFNA PROPERTY TRADES LTD.

3, நவீனசந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

போன்: 23698

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை கிழக்கு காலம்சென்ற கதிரித்தம்பி நாகரத்தினத்தின் மரண சாதனமற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர்

நாகரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி. பிரதானவீதி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

மனுதாரர்

வழ. இல. தத்துவம்/186

எதிராக

1. நாகரத்தினம் சிவகுமாரன் தெல்லிப்பழை கிழக்கு, தற்போதய விலாசம் பெடிக் றசேயர் றோட்டு, சிங்கப்பூர்.
2. நாகரத்தினம்சிவகுகன் தெல்லிப்பழை கிழக்கு தற்போதய விலாசம் பேடக் பல்கலைக்கழகம். இஸ்டியாஹூ ஐக்கிய அமெரிக்கா.
3. நாகரத்தினம்சிவசங்கர் தெல்லிப்பழைகிழக்கு, தெல்லிப்பழை.

எதிர்மனுதாரர்கள்

மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு சித்திரைமாதம் 4ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,

சுப்பிரமணியம் வேலாயுதம்,
பதிவாளர்.

வரைவு:
V. S. கணேசலிங்கம்,
மனுதாரரின் சட்டத்தரணி.
594

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

கல்வளை. சண்டிருப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை குமாரசாமி கைம்பெண் பரமேஸ்வரியின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்...

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் T/180

குமாரசாமி விநோதன், கல்வளை, சண்டிருப்பாய்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 14 திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்டபின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17/30 திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரிப்பு:
எம். கே. ஆனந்தம்,
மனுதாரரின் சட்டத்தரணி.
426

## Uduvil Girls' College
# Computer Programming & Data Processing

TOPICS:-

1. INTRODUCTION TO COMPUTING AND DATA PROCESSING
2. PROGRAMMING IN HIGH LEVEL LANGUAGES: BASIC, FORTRAN, RPG 11 AND COBOL
3. PRACTICAL (20-30) HOURS ON A MICRO COMPUTER (ACTUAL HANDLING OF COMPUTER)

COURSE PREREQUISITE :-

Centre's Aptitude Test

| | |
|---|---|
| INTRODUCTION TO COMPUTING AND DATA PROCESSING | 500/- |
| PROGRAMMING IN BASIC LANGUAGE WITH PRACTICALS | 1,000/- |
| PROGRAMMING IN FORTRAN / PROGRAMMING IN COBOL / PROGRAMMING IN RPG 11 | 1,000/- |
| I. D. P. M. EACH PART | 600/- |

LECTURES and PRACTICALS:-
Week Days 9-00 a. m. to 3-00 p. m.

(Lectures are Conducted by Jaffna Campus Lecturers.)

★ Next course starts on 15-02-1984. Apply on or before 12-02-1984.

★ HOME ECONOMICS COURSES IN DRESS MAKING. CAKE DECORATION, INTERIOR DECORATIONS. HAIR DRESSING STARTS ON 15-02-1984.

Apply on or before 12-02-1984.

# பெய்ரூட்டில் கடும்சண்டை!

# 100 பேர் பலி; 300 பேர் காயம்!!

## வீதிகளில் மக்கள் கொலை; கடைகளில் சூறை

### ஜனாதிபதிஜமாயல் பதவிவிலகவேண்டுமென தீவிரவாத முஸ்லிம்கள் வற்புறுத்தல்!

பெய்ரூட், பெப். 7

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் லெபனான் இராணுவத்துக்கும், ட்ரூஸ், ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளுக்குமிடையே கடும் சண்டை இடம்பெற்றுவருகின்றது. இச்சண்டை கடந்த நான்கு தினங்களாக தீவிரமடைந்துள்ளது. எதிர்க்கட்சிகள் லெபனான் ஜனாதிபதி அமீர் ஜமாயலை பதவி விலகும்படி வற்புறுத்தி வருவதைத் தொடர்ந்தே நிலைமை நாளுக்குநாள் மோசமடைகின்றது.

நேற்றைய மோதலில் நூறு பேர் கொல்லப்பட்டனர். 300 பேர் காயமடைந்தனர். வீடுகள், வாகனங்கள், மாடிக்கட்டிடங்கள் பல சேதமாக்கப்பட்டுள்ளன.

லெபனான் இராணுவத்தில் உள்ள முஸ்லிம் வீரர்களும் மேலிடத்தின் உத்தரவுகளை உதாசீனம் செய்யத்தொடங்கியுள்ளனர். இதனால் ட்ரூஸ், ஷியாமுஸ்லிம் கிளர்ச்சியாளர்களை அவர்கள் எதிர்க்க முன்வருகிறார்களில்லை.

இந்த இக்கட்டான நிலைமையினால் லெபனான் இராணுவத்திலுள்ள கிறிஸ்தவ வீரர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளர்ச்சியாளர்களின் கை மேலும் ஓங்கிவருகின்றது.

மோதல்கள் புதிய இடங்களுக்குப் பரவியுள்ளன. பொது மக்கள் செய்வதறியாது பாதுகாப்பான இடங்களை நாடி ஓடுகின்றனர். விரக்தியடைந்த நிலையில் இவர் தாமும் ஆயுதமேந்தி தமக்கு ஆதரவானவர்கள் சார்பாக மோதுகின்றனர்.

நேற்றையதினம் தெருவீதிகள் அல்லோலகல்லோலப்பட்டன. வீதிகளில் சென்றோர் பலர் கொல்லப்பட்டனர். அத்துடன் வர்த்தக நிலையங்களும் சூறையாடப்பட்டன.

#### அமெரிக்க நிலைகளில் தாக்குதல்கள்

பெய்ரூட் விமான நிலையத்திலுள்ள அமெரிக்க இராணுவத்தளம் நேற்றுப்பலமாகத் தாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கிருந்தும் அமெரிக்க வீரர்கள் வெளியேறும்நிலை ஏற்பட்டது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்க போர்க்கப்பல்களும் விமானங்களும் பெய்ரூட்டை நோக்கியுள்ள மலைப்பகுதிகளில் பதில் தாக்குதல் நடத்தின. இப்பகுதிகளிலிருந்தே கிளர்ச்சியாளர்கள் இயங்கிவருகின்றனர்.

லெபனானில் பல்வேறு பகுதிகளிலும் மோதல்கள் விரிவடைந்திருப்பதைத் தொடர்ந்து அரசியல் நிலைமை ஆட்டங்கண்டுள்ளது. லெபனான் ஜனாதிபதி அமின் ஜமாயல் புதிய பிரதமரின்கீழ் புதிய அமைச்சரவையை நியமிப்பதில் ஈடுபட்டுள்ளார். ஆனால் எதிர்தரப்பு முஸ்லிம்கள் திரு. ஜமாயல் பதவிவிலகுவதையே தீவிரமாக வற்புறுத்துகின்றனர்.

பெய்ரூட் விமான நிலையம், மத்தியதரைக்கடல் கப்பல் போக்குவரத்துப் பாதை என்பன லெபனானில் கடும் மோதல்கள் காரணமாக மூடப்பட்டுள்ளன. (இ)

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

(அரியாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 11-ம் திகதி காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (க)

### பிரதமர் இந்திராகாந்திக்கு 'ரவீந்திரநாத்பட்டயம்'!

#### மனிதாபிமான சேவைக்காக வழங்கப்படவுள்ளது

புதுடில்லி, பெ. 7

1983ம் ஆண்டுக்கான கவிஞர் சர் ரவீந்திரநாத் 100-வது பிறந்ததினபட்டயம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு வழங்கப்படவுள்ளது. இப்பட்டயத்தை வழங்குவதற்கான முடிவை ஆசிய சங்கம் அதன் 290வது ஆண்டு பேரவைக் கூட்டத்தில் தீர்மானித்தது.

திருமதி இந்திராகாந்தியின மனிதாபிமானச் சேவைகளைக் கௌரவிக்கும் விதத்திலேயே இந்த ரவீந்திரநாத் பட்டயம் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இத்தகவலை மேற்கு வங்காள ஆளுநர் திரு. ஏ. பி. சர்மா நேற்றுத் தெரிவித்தார்.

அடுத்தமாதம் புதுடில்லியில் இடம்பெறவுள்ள விசேட வைபவமொன்றில் திருமதி காந்திக்கு ரவீந்திரநாத் பட்டயம் வழங்கப்படும். இந்திய ஜனாதிபதி திரு. ஜியானி ஸெயில்சிங் இப்பட்டயத்தை திருமதிகாந்திக்கு வழங்குவார். (இ)

### 'சலஞ்சர்' செலுத்திய

## இரு செய்மதிகள்

### செயலற்றுப் போயின!

வாஷிங்டன், பெப். 7

அமெரிக்காவின் 'சலஞ்சர்' விண்வெளி விமானத்தால் விண்வெளியில் செலுத்தப்பட்ட இரு செய்மதிகள் செயலற்றுப்போயுள்ளன.

முதலாவது செய்மதி பழுதடைந்தது. இரண்டாவது செய்மதி செலுத்தப்பட்ட சற்று நேரத்தில் மர்மமான விதத்தில் காணாமற்போயிற்று.

காணாமல்போன செய்மதி இந்தோனேஷியாவின் விண்வெளி ஆராய்ச்சிகளுக்கென அனுப்பப்பட்டதாகும். இந்த செய்மதி விண்வெளிக்கு செலுத்தப்பட்ட சற்று நேரத்தில் 'சலஞ்சர்' விண்வெளி விமானத்தில் இருந்தவர்களால் இதன் செயல்பாட்டைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. அத்துடன் 'ராடர்' திரையிலிருந்தும் இது மறைந்தது.

இதனைத்தொடர்ந்து தரைக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அமெரிக்க 'நாஸா' நிறுவனம் அச்செய்மதியைக் கண்டுபிடிக்கும்படி சகல செய்மதி கண்காணிப்பு நிலையங்களுக்கும் அறிவித்தது. ஆனால் அச்செய்மதியின் மறைவு தொடர்ந்து மர்மமாகவே இருக்கின்றது. (இ)

### தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1983 ஆண்டுஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி ஆங்கிலத் தகுதித் தேர்வு (புதிய பாடத்திட்டம்) தமிழ், ஆங்கில, சுருக்கெழுத்து தேசிய தராதரப் பத்திரம் (வணிகம் எந்திரவியல்) ஆகியவற்றிற்கு நடைபெறவிருந்த தொழில் நுட்பக் கல்லூரிப் பரீட்சைகள் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### சுவரொட்டிகளை கிழித்து அழித்தனர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தியில் மதில் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த பல சுவரொட்டிகளை இராணுவத்தினர் அவ்வீதிவழியாக வந்துகொண்டிருந்த பொது மக்களைக் கொண்டு கிழித்து அழித்தனர்.

சுதந்திர தினத்தன்று திடீரென 'ட்றக்'கில் வந்த இராணுவத்தினர் சந்தியில் நின்று கொண்டு வீதிவழியாக சென்ற பொதுமக்களை பலாத்காரமாக கூப்பிட்டு இந்த சுவரொட்டிகளை கிழித்து அழிக்கச்செய்தனர். பொதுமக்களும் அவற்றைக் கிழித்து அழித்தனர்.

### அகதிகளுக்குப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஜூலை மாதக் கலவரங்களினால் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு இலவச அலுமினியப் பாத்திரங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை மூலம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வைத்து கடந்த வாரம வழங்கப்பட்டன.

முதல் தடவையாகப் புடவைப் பொதிகள் பெற்ற அகதிகளுக்கு மாத்திரமே அவ்வப் பகுதிக் கிராமசேவை அலுவலர்கள், விசேட சேவை அலுவலர்கள் ஆகியோர் மூலம் இந்த அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

### இந்திய ராஜதந்திரி கொலை

## கொலைஞர்களை கைதுசெய்ய பூரண ஒத்துழைப்பு!

### பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் அறிவிப்பு

### கொலையுண்டவரின் குடும்பத்துக்கு அனுதாபம்

பிரிட்டன், பெப் 7

"பிரிட்டனில் இந்திய ராஜதந்திரியான திரு. ஆர். எச் மாத்ரேயைக்கொலை செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவர பிரிட்டிஷ் பாதுகாப்புச்சேவை பூரண ஒத்துழைப்புகளை வழங்கும்" என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சர் தெரிவித்துள்ளார்.

திருமதி தாட்சர் திரு. மாத்ரேயின் மனைவியாருக்கும் குடும்பத்தவருக்கும் தமது அனுதாபச்செய்தியை அனுப்பியுள்ளார். இந்திய அரசுக்கு விடுத்த செய்தியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். திரு மாத்ரே கொலைசெய்யப்பட்டது மிருகத்தனமான, மனிதாபிமானமற்ற செயல் என்றும் திருமதி தாட்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி உட்பட காஷ்மீர் முதலமைச்சர் இந்திய எதிர்கட்சித்தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள் ஆகியோரும் திருமதி மாத்ரேக்குத் தமது ஆறுதல்களை வழங்கியுள்ளனர்.

ஒருலட்சம் ரூபாவை நஷ்டஈடாக திருமதி மாத்ரேக்கு இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. அத்துடன் திரு. மாத்ரே ஓய்வுபெறும்வரை பெறவிருந்த சம்பளத்தை தொடர்ந்து வழங்கவும், ஓய்வின் பின்னர் அவருக்கு சேரவேண்டிய உரியபடிகளுடனான ஓய்வூதியத்தை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

காஷ்மீர் விடுதலை இராணுவம் என்றழைத்துக்கொண்ட குழுவினரே திரு. மாத்ரேயைக் கொலைசெய்தனர். இவர்கள் தமக்கு ஒரு லட்சம் ஸ்டேர்லிங்பவுண்களை தரும்படியும், இந்தியாவில் உள்ள அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படியும் கூறி திரு மாத்ரேயைப் பணயம் வைத்தனர். ஆனால் இந்திய அரசாங்கம் இப்பணயநாடகம் குறித்து விழிப்படையும் முன்னரே அவர்கள் திரு மாத்ரேயைக் கொலை செய்தனர்.

திரு. மாத்ரேயின் சடலம் வீதியொன்றில் சன்னங்களால் சல்லடைபோடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. பம்பாயில் உள்ள இவரது வாசஸ்தலத்திலேயே இறுதிச் சடங்குகள் இடம்பெறும். (இ)

**மணிவாக்கு**

சொல்லும்போது கேட்டவரைத் தன்வயப் படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

—திருவள்ளுவர்

# நமதுநோக்கு

## நிர்வாகப் புலவர்களே! நிவாரணத்தில் விரையுங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெள்ளப்பெருக்கினால் சுமார் நான்கு லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனரென்பது நேற்றைய செய்தி.

சாதாரண காய்ச்சல் சன்னியாக மாறும் விதில் வெள்ளம் செயற்படுகின்றது; மழை தொடர்ந்து பெய்வதால் இன்றைய நிலைமை இன்னும் மோசமடையலாமென அஞ்சநியாயமுண்டு.

1957ல் இப்பகுதி கண்ட பெருவெள்ளத்திலும் மிக மோசமானது இது.

நாட்டின் முதுகெலும்பாகிய கிராம வாசிகளும் விவசாயிகளுமே பெரிதும் பாதிக்கப்பட்ட வர்க்கம்! நாம் பார்த்துக்கொண்டு புள்ளிகள் திரட்டுவதில் பொழுது போக்கலாமா?

அவர்கள் வாழ்ந்தால் நாடு வாழும்; அவர்கள் வீழ்ந்தால் நாடு வீழும். அவர்கள் சிரித்தால் இந்த நாடு சுபீட்சத்தை நோக்கி நடைபோடுகிறது என்பது பொருள். அவர்கள் அழுதால் வறுமையும் வாட்டமும் இந்த நாட்டைப் பிடித்துவிட்டன என்பது அர்த்தம்; எந்தப் பிரசாரமும் இதனை மறுக்கத்துணியாது.

கிராமவாசிகள் இனமத மொழி வேறுபாடு கடந்த ஆத்மபலம்பெற்ற ஒற்றுமைப்பட்ட பிறவிகள். அவர்களைக் கெடுப்பவர் யாரென்பது தெரியாதா?

உணவில் - நெல்உற்பத்தியில் தன்னிறைவுகண்டு தாங்கமுடியாத களிப்பை அனுபவிக்கும் இவ்வேளையில், ஆட்சிக்கு பணிவு புகட்ட நல்ல சந்தர்ப்பம் வந்துள்ளது.

தேர்தல்களில் நாம் கிராமவாசிகளை வாக்குரிமை யென்ற அதிகாரச்—அநியாய—சீட்டுக்குப் பயன்படுத்துகின்றோம், தடித்த தோலர்களுக்கும் உரத்த குரலினர்களுக்கும் மனச்சான்றினை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியவர்களுக்கும் தேர்தல் சந்தர்ப்பம் வாய்ப்பளிக்கிறது.

இன்றைய நெருக்கடி எவ்விதவாசால வாக்குறுதியையும், மாநாட்டையும், கருத்தரங்கையும் காத்துநிற்கும் தன்மையதல்ல, அதுமட்டுமல்ல, காலமும் இடமும் (Time and Venue) 'புறக்கணிக்கப்பட்ட மக்கள்' என்ற சந்தேகத்தை வளர்க்கும் இயல்புடையன.

காலமும் இடமுமென்று சொல்லாமல் இன்றைய புவியியலும் வரலாறும் என்றேசொல்லலாம். இவற்றைப் பற்றிய தப்புக்களை இன்றைய வெள்ளத்தில் ஓட்டிவிட இது நல்ல சந்தர்ப்பம்.

அதனைத் தக்க வழியில் பயன்படுத்துகிறோமா? விடெரியும்போது புலவன் செய்தியைச் சந்தச் சீர்வு கொண்டபாட்டில் அறிவித்த பாரம்பரியத்துக் குரித்தான மக்கள் நாம். ஒற்றை ஆட்சியின் இன்றியமையாமை பேசும் நாம், இந்தச் சிறு தீவில் இக்கட்டத்தில் உடனடி நிவாரணத்தில் இறங்காது, கச்சேரி மகாநாடு, ஹெலிகொப்டர் மூலம் நிவாரணம், சமூக சேவைகள் நிவாரண ஆலோசனை பற்றிப் பேசுகின்றோம்.

பிரளயம் எங்கள் திட்டங்களுக்குப் பொறுத்திருக்காதென அறிக.

இன்றளவில் பல லட்சம் பேர் வெள்ள அகதிகளாய் விடுவார்கள். இவ்வித எதிர்பாராத அழிவுகளை துரிதமாக அணுகி நிலைமையைக் கட்டுப்படுத்த நாம் இன்னும் பயிற்சியற்றவர்களாக, நிர்வாக நெளிவு சுளிவுகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

வெள்ளத்தில் தாழ்ந்திருக்கும் இந்நாட்டின் ஒரு பகுதியின் புவியியலை, அப்புவியியலுக்கு இயல்பான வரலாற்றை, அவ்வரலாறு எழுப்பும் தனித்துவ அரசியல, பொருளாதார பிரச்னைகளை, நாட்டின் முதலாவது சேவகர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், அவருடைய சர்வ கட்சிக் குழுவினரும் நேரில் பார்வையிடுவதற்கு இது உகந்த தருணம்.

தெய்வத்தைத் திட்டிக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு ஆட்சி தாமதமற்ற கணிசமான புனரமைப்பை வழங்க வேண்டும்.

பேசிப்பேசி அலுப்புப் பிடித்த தறுவாயில் சறுக்கினது சாட்டென்று வெளியேற நிற்கும் சர்வகட்சி பிரதிநிதிகளுக்கு இத்தகைய பரிசோதனைப் பயணம் ஒரு நல்ல மாற்றமாகவும் அமையும்; வெளியேறினவர்கள் கூட இவ்விடயத்தில் மனமாற்றம் கொண்டு இப்புனித யாத்திரையில் பங்குபற்றலாம்.

துன்பத்தில் உதயமாகும் நட்பு நிலைத்து நிற்கும் தன்மையது

குழப்பங்களால், குரோதங்களால் நமக்குரிய பண்பாடும், சிந்தனைப் பரிணாமமும் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கும் வேளை இது; இயற்கையால் ஏற்பட்ட அனர்த்தங்களை அணுகும் விதத்தில் மனமாற்றமும், பயனுள்ள ஆக்க ரீதியான பணியும், வேற்றுமை மனோபாவத்துக்கு தடுப்பு மருந்தாகும்.

மரணம் எல்லோரையும் —ஆண்டியையும் அரசனையும்— மட்டம் தட்டும் வீரமுடையது. மரணத்தை வெல்ல மார்க்கண்டேயரின் தவப்பலம் தேவை.

நீர், தீயென்ற இயற்கையின் கோரம், அத்தகையதென்றாலும், விஞ்ஞானம் அதனை வெல்லவல்லது; தனியேயல்ல, மனிதனின் வாழ்க்கை மனோபாவமும் அவசியமானது.

# "வட்டமேசை மகாநாடு அரசாங்கம் ஏற்கனவே எடுத்த தீர்வுகளை திணிக்க முயலுகிறது!"

## மகாநாட்டிலிருந்து விலகுவது பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிக்கை

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னைக்கான தீர்வுகளை அரசாங்கம் ஏற்கனவே தனது விருப்பப்படி தயார் செய்து வைத்துள்ளது, அத்தீர்வுகளை வட்டமேசை மகாநாட்டிலும் திணித்துவிடவே அது முயலுகின்றது. வட்டமேசை மகாநாட்டின் ஆரம்பத்தில் ஸ்ரீ. ல. சு. கட்சி அரசாங்கத்திடம் அதன் தீர்மானங்களை முன்வைக்கும்படி கோரியது. ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்ய மறுத்து விட்டது ஆகையினாலேயே ஸ்ரீ. ல. சு. கட்சி வட்டமேசை மகாநாட்டிலிருந்தும் விலகுவதெனத் தீர்மானித்துள்ளது"

இவ்வாறு ஸ்ரீ. ல. சு. க. பொதுச் செயலாளர் திரு. ரத்ன சிறி விக்கிரமநாயக்கா தமது கட்சி சர்வகட்சி மகாநாட்டிலிருந்து விலகுவதை அறிவித்து வட்டமேசை மகாநாட்டுச் செயலாளர் திரு. ச. எவ். டயஸ் அபயசிங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'வட்டமேசை மகாநாட்டிலிருந்து ஸ்ரீ. ல. சு. கட்சி விலகிக்கொள்வதற்கு அம் மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளும் ஒரு முக்கிய காரணமாகும்.

அக்கட்சி வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்ளும் ஸ்ரீ ல. சு. கட்சி பற்றியும் பௌத்த பிக்குகள் பற்றியும் இந்தியாவில் தவறுகப் பிரசாரம் செய்துள்ளது. இப்பிரசாரத்தினால் ஸ்ரீ. ல. சு. கட்சியும், சம்பந்தப்பட்ட பிக்குகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கையின் சுதந்திரம் ஒருமைப்பாடு ஆகியனவற்றைப் பாதிக்கும் விதத்திலும் இந்தியாவின் உதவியை நாடிநிற்கிறது.

பயங்கரவாதமும், வன்முறைகளும் இந்த நாட்டில் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த ஆண்டான 1977 லிருந்து தொடர்ந்து இருந்து வருகின்றது. வட்டமேசை மகாநாடு நடந்து கொண்டிருக்கும் போதே வடக்கு கிழக்கில் பயங்கரவாதம், வன்முறைகள் நிகழுகின்றன. இந்தநிலை அரசினால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாததையே சுட்டிக் காட்டுகிறது.

இதேவேளை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிடும் நோக்கம் கிடையாது என்று பல தடவைகள் உறுதியளித்துள்ளதையும் ஸ்ரீ. ல. சு, கட்சி பாராட்டுகிறது, (கி)

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்

# விசேட முற்பண விண்ணப்பத்தை இம்மாத முடிவுக்குள் அனுப்பவேண்டும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கசெயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இரண்டு வருட சம்பளத்தை விசேட முற்பணமாகப்பெற விரும்பும் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள், அதற்கான விண்ணப்பத்தினை இம்மாதம் முடிவதற்குள் கிடைக்கக்கூடியதாக முன்னைய கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென இ. த. ஆ. ச. பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற வன்செயலின்போது பாதிக்கப்பட்டோ அல்லது உடைமைகள் இழந்துபோன ஆசிரியர்கள் தமது இழப்பை நிவர்த்திசெய்யும் பொருட்டு 2 வருட சம்பளத்தை முற்பணமாகப் பெறலாமென பொது நிர்வாகஅமைச்சு அறிவித்துள்ளது இம் முற்பணத்தைபெற விரும்பும் 10 வருட அரசாங்க சேவையை முடித்த ஆசிரியர்கள் அனைவரும் இதற்காக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தினை சங்கப்பணிமனையில் பெற்று பூரணப்படுத்தி இம்மாத முடிவிற்குள் தாம் வன்செயல் காலப்பகுதியில் கடமையாற்றிய மாவட்டக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென இ. த. ஆ. ச. பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விண்ணப்பத்தினை இரட்டைப் பிரதிகளில் தயாரித்து ஒரு பிரதியை சங்கப் பணிமனைக்கு அனுப்பி வைத்தால், காலதாமதமின்றி இம்முற்பணத்தை இவ்வாசிரியர்கள் பெற சங்கம் ஆவன செய்யுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தமது இழப்புக்களையும் அதன் பெறுமதியையும் உறுதிப்படுத்தும் தஸ்தாவேஜுகளையும் தமது விண்ணப்பத்துடன் இணைத்து கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புவதோடு தஸ்தாவேஜுக்களின் புகைப்படப் பிரதிகளையும் இ. த. ஆ. சங்கத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளனர். (வெ)

## நகைகள் அடகுவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிகிளைகளில் நகைகள் அடகுவைப்பது நிறுத்தப்பட்டிருந்த போதிலும். யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கியில் இம்மாதம் 1-ம் திகதி முதல் அடகு வைக்கப் பட்டு வருகிறது

# உடைப்பெடுக்கும் நிலையில் உள்ள குளங்கள்

**மக்கள் கருத்து**

திருநெல்வேலி கிழக்கில் கலியங்காட்டுச் சந்தைக்கு அண்மையில் அமைந்திருக்கும் பூதவராயர் குளம் உடைப்பெடுக்கும் கட்டத்தில் உள்ளது. உரிய அரசாங்க அதிகாரிகள் அலட்சியம் செய்யாது கருணையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே குளக்கட்டின் ஒருபகுதி உடைந்து விழ்ந்து விட்டது. மேலும் குளத்தைநோக்கி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு எதிரேயுள்ள வாய்க்கால் சேற்றினாலும், முட்கள், கற்கள், கழிவுப்பொருட்களாலும் மண்டிக்கிடப்பதால் கடலுக்கு ஓடிச்செல்லும் தண்ணீர் தடுக்கப்படுவதால் ஆபத்துக்கு இது வழிவகுக்கிறது இதனால் அயலில் உள்ள கிராமமும், செங்குந்த இந்துக்கல்லூரியும், கலியங்காட்டுச் சந்தைப்பகுதியும் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்படலாம். இதனால் இவ்வூர் ஏழை பொதுமக்களுக்குபலவித அனர்த்தம் ஏற்படும். குளத்தின் தண்ணீர் கடலுக்குச் செல்வதற்கும், உடைந்தபகுதிகளுக்கு மண் மூடையை போட்டு உடன் நடவடிக்கை எடுத்தும் பொதுமக்களையும் பொருட்களையும் ஆபத்திலிருந்தும் காக்கவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்,
ஆடியபாதவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## வருடாந்தஉற்சவம்

(வண்ணார்பண்ணை)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்களும் ஆலய குரு பிரம்மஸ்ரீ க. ஜெகநாதக் குருக்கள் தலைமையில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் உற்சவம் நடைபெறவிருக்கின்றது.

இம்மாதம் 16-ம் திகதி காலை தேர்த் திருவிழாவும், 17-ம் திகதி காலை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## வேலணை உதவி அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு வேலணை உதவி அரசாங்க அதிபராக திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் இம்மாதம் முதல் பதவி ஏற்றுள்ளார்.

இப்பகுதி உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு ஏ. கி. நாகராசா காலமானதைத் தொடர்ந்து நெடுந்தீவு உதவி அரச அதிபர் திரு ஏ மகாலிங்கம் பதில் அதிபராக இப்பகுதிக்கு கடமையாற்றினர்.

தீவுப்பகுதி தெற்கு புதிய உதவி அரசஅதிபரான திரு. சடாட்சரசண்முகதாஸ் தீவுப்பகுதி வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராகவும் முன்னர் கடமையாற்றியவராவார். (வண்-நிரு)

## ஜூலை கலவர புனருத்தாரண

# வரி அறவிடும் நடவடிக்கை: கிறிஸ்தவ இயக்கம் எதிர்ப்பு

(பண்டத்தரிப்பு)

அரசாங்கம் கலவர கால புனருத்தாரண நிதிக்கு ஒரு சதவீதத்தை சகலரது சம்பளங்களிலுமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபித்து கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் யாழ். மாவட்டக்கிளை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல்லுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜூலை மாத கலவரங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சடுபடவில்லை. தோட்டத் தொழிலாளர்களும் மற்றும் தென்னிலங்கையிலுள்ள தமிழ் மக்களும் தங்கள் உயிர் உடமைகளை இழந்து பெரும் பாதிப்புக்குள்ளாகினார்கள். இந்நிலையில் இக்கலவரங்களுக்கு பொறுப்பாகவும் உடந்தையாகவும் இருந்தவர்களிடமிருந்தே இந்தப்புனருத்தாரண வரியை அறவிட வேண்டும்.

"அத்துடன் இப்பகுதியிலுள்ள சகல ஊழியர்களுக்கும் அரசினால் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வுகளும், விசேட படிகளும் இன்னும் வழங்கப்படவில்லை, வாழ்க்கைச் செலவுகள் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் இவ்வித வரியை சம்பளத்திலிருந்து அறவிடுவது மிகவும் அநீதியானது. ஆகவே இது பற்றித் தாங்கள் ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இந்த வரியை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எமது இயக்கம் கேட்டுக் கொள்ளுகின்றது"

கிளையின் செயலாளர் திரு. அ. ம. யோ. புவனேஸ்வரன் இந்த மகஜரை இயக்கத்தின் தீர்மானப்படி நிதி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

---

## சட்டவிரோத மரக்கடத்தல் வழக்கு:

# பாராளுமன்ற நடைமுறைபற்றி பிரஸ்தாபம்

(நல்லூர்)

"வனபரிபாலனச் சட்டம் வகுக்கப்பட்டபோது இச்சட்டத்தின் கீழ் அதிகாரிகள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்ததைத் தவிர்க்கும் நோக்குடன், தனி மனித சுதந்திரத்தைக் கருத்திலிருத்தி பாராளுமன்றம் ஒரு நடைமுறையை விதித்துள்ளது சட்டவிரோதமாக மரம் ஏற்றும் வழக்குகளை விசாரணை செய்யும்போது சட்டம் வலியுறுத்தும் இந்த நடைமுறை பேணப்பட்டதா என்று ஆராய்வது நீதிமன்றத்தின் பாரியகடப்பாடுஆகும்."

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதிபதி எஸ் சதிரவேற்பிள்ளை சட்டவிரோதமாகமரமேற்றிய வழக்கு விசாரணை நடாத்திய போது எதிரி தரப்புச் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் மேற்கண்டவாறு தமது சமர்ப்பணத்தில் வலியுறுத்தினார்.

இவ்வழக்கில் 82-ம் ஆண்டு மே 22-ம் திகதி 706 ரூபா 32 சதம் பெறுமதியுள்ள முதிரை மரக் குத்திகளை 28 ஸ்ரீ 1754 இலக்க லொறி மூலம் உரிய அனுமதிப்பத்திரமின்றிச்சட்டவிரோதமாக ஏற்றிச்சென்றதாக கா. சிவகடாட்சம், கு. தட்சணாமூர்த்தி ஆகிய இருவருக்கும் எதிராக வனபரிபாலனத் திணைக்களத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

"வனபரிபாலன அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டவிரோதமாகஏற்றப்படும் மரத்தைக் கைப்பற்றியதும், கைப்பற்றப்பட்ட மரத்திலும், அதனை ஏற்றிவந்த வாகனத்திலும் ஓர் அடையாள முத்திரை இடுதல் வேண்டும் என்பதே வனபரிபாலனச் சட்டம் பேசும் நடைமுறை ஆகும். பாராளுமன்றம் இச்சட்டமூலம் அதிகாரங்களை வழங்கியபோது அதிகாரிகள் அவ்வதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து சாதாரண மனிதனுக்கு இடர்பாடுஏற்படுத்துவதைத் தவிர்க்கவே இத்தகைய நடைமுறையை வலியுறுத்தி உள்ளது. அத்தகைய நடைமுறையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேணவில்லை என்பது இவ்வழக்கில் தெளிவாகிறது" என்று சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் வாதாடினார்.

இத்தகைய நடைமுறையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேணத்தவறியமையால்சாட்சிகளால் கைப்பற்றப்பட்டமரத்தினை அடையாளம் காட்டவும் இயலவில்லை. அது மட்டுமல்லாமல் மரத்தினை ஏற்றிவந்த வாகனம் நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்படாது பொலிஸ் நிலையத்தில் வைத்து நீதிமன்றப் பதிவாளர் அனுப்பிய கட்டளையின் அடிப்படையில் எடுத்துச் செல்லஅனுமதிக்கப்பட்டுள்ளது.

வணிகரட்ணவுக்கும் வெலப்பிட்டியாவுக்கும் இடையிலான வழக்கில் நீதிமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டவை சம்பந்தமாக எத்தகைய சந்தேகமும் எழுவதற்கு வழக்குத் தொடுநர் வாய்ப்பு அளிக்கக்கூடாது என்று நிறுவப்பட்டுள்ளது என்பது புதிய சட்ட அறிக்கை இலக்கம் 75 மூலம் தெளிவாகிறது என்று சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் வாதாடி எதிரிகளை விடுதலை செய்யுமாறு சமர்ப்பித்தார்.

மேல்விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

---

## 'இலவச உடை விநியோகம்'

[அரியாலை]

"அன்பு வழியில் செயல்படுவார் மூலமே நாம் சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும். சமூகத்தில் இருக்கும் வறிய பிள்ளைகளுக்கு நாம் உதவுவதன்மூலம் அவர்கள் சிறந்த கல்வியைப் பெற வழி செய்ய முடியும். வறிய பிள்ளைகளுக்கு உடைகள் வழங்குவது இன்னும் பெரிய உதவியாக அமையும்."

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக் கிளையின் சார்பில் மீசாலையில் நடைபெற்ற இலவச உடை வழங்கும் வைபவத்திற்குத் தலைமை வகித்த கிளைத் தலைவர் திரு. கா. ரூபவரன் குறிப்பிட்டார்.

---

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

(சுழிபுரம்)

வருடம்தோறும் கடந்த பத்து வருடங்களாக பனம் விதைகளை இலவசமாக வழங்கி வரும் தொல்புரம் வர்த்தகர் திரு துரையப்பா இராசரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வருடாவருடம் ஒவ்வொரு லொறி பனம் விதைகளை திரு இராசரத்தினம் தொழிலதிபர் திரு. க. கனகராசாவுக்கு வழங்கிவருகிறார்.

---

## நவீன சந்தை 3-ம் கட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தை மூன்றும் கட்டத்திற்கான மாதிரி படம் தயாரிக்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை உதவி கட்டட கலைஞர் திரு. ஆ. ன்செல்வம் இன்று இடத்தை நேரில் பார்வையிடுவார். (க)

---

## ரூபா 150 தர்மப் பணம் செலுத்த உத்தரவு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சட்டவிரோதமாக பியர் விற்பனை செய்ததாக இக்ஹோட்டலில் கடமையாற்றியவருக்கெதிராக கலால் பகுதியினரால் தொடரப்பட்ட வழக்கு யாழ் நீதவான் நீதிமன்றத்தில்விசாரணைக்கெடுக்கப்பட்டபோது எதிரியை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிபதி தர்மப் பணமாக 150 ரூபா ஆச்சிரமம் ஒன்றுக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.

---

## திருமுறை பண்ணிசை வகுப்புகள்

[வண்ணார்பண்ணை]

வேலணை முத்து இளைஞர் மன்றமும், வேலணை இந்துவளர்ச்சிக்கழகமும் இணைந்து இப்பகுதிமக்களின் ஆத்மீக வளர்ச்சிகருதி இலவசமாக தேவார, திருமுறை, பண்ணிசை வகுப்புகளை நடத்தமுன்வந்துள்ளன.

வேலணை முருகன் ஆலயத்தில் இவ்வகுப்புகள் இக்கழகத்தினரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது ஒவ்வொரு வாரமும் சனி ஞாயிறு தினங்களில் இவ்வகுப்புகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மிருதங்கம், சங்கீதம், ஆங்கிலம் ஆகிய பயிற்சி வகுப்புகளையும் இலவசமாக நடத்தஇக்கழகங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

---

## தேநீர்விருந்து

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணிப்பட்டம் பெறும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவரும், 'தினகரன்' பிரதம ஆசிரியருமான திரு இ. சிவகுருநாதனுக்கு தேசிய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நாளை வியாழக்கிழமை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் தேநீர் விருந்துபசாரம் அளித்து கௌரவிக்கவுள்ளது. (வெ)

---

# "பனம்பொருள் ஏற்றுமதியினால் அந்நியச் செலாவணியை பெறலாம்"

[அரியாலை]

"பனையிலிருந்து கள்ளுமட்டும்தான் பெறமுடியும் என்று எண்ணிய காலம்போய் இன்று பனையிலிருந்து பெறப்படும் சகலபொருட்களும் மனிதன் உபயோகத்திற்கு உதவும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது பனையிலிருந்து கிடைக்கும் கள்ளையும் கருப்பணியையும் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும்பணத்தை வெளிநாட்டுச் செலாவணியாகப்பெறமுடியும் என்றநிலைமை ஏற்பட்டுவருகிறது".

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய மண்டபத்தில்பனம் பொருள்பொருட்காட்சியைதிறந்துவைத்துபனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா பேசுகையில் கூறினார்.

நிலையத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில்: "வீடுவேயவும், வேலியடைக்கவும், மாட்டுக்கு உணவாகவுமே பனையோலை பாவிக்கப்பட்டது. ஆனால் இன்று அதே பனையிலிருந்து கிடைக்கும் குருத்தோலையைக் கொண்டு வெளிநாட்டவரைக் கவரக்கூடிய அநேக பொருட்களைச் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கிறது. பனை ஓலையினால் செய்யப்படும் பொருட்களின் அழகினால் கவரப்பட்ட வெளிநாட்டவர்கள் இப்பொருட்களைப் பெருமளவில் கொள்வனவு செய்துவருகிறார்கள்" என்று கூறினார்.

நிலையச்செயலாளர் திரு. மா. கனகநாதன் நன்றியுரை கூறினார் பொருட்காட்சி இரண்டு நாட்கள் நடைபெற்றது.

---

# "எங்கள் பாடசாலை என்னும் உணர்வு ஏற்பட வேண்டும்"

(மானிப்பாய்)

"ஒரு பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கு எங்கள் பாடசாலை என்ற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஏற்படுவதன் மூலமே ஒவ்வோர் பாடசாலைகளும் சிறந்த முன்னேற்றங்களைப் பெறலாம்."

இவ்வாறு கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் வித்தியாலய அதிபர் திருமதி பீ. சோமசுந்தரம் கூறினார்.

கடந்த கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பெற்றதனை பற்றித்து நடைபெற்ற புது வருட நிர்வாகிகள் தெரிவில் வித்தியாலய அதிபர் திருமதி பீ. சோமசுந்தரம் தலைவியாகவும், திரு எஸ். சுந்தரம் உபதலைவராகவும், திரு. பீ. வரதகுலசிங்கம் செயலாளராகவும், திருமதி என். சுப்பிரமணியம் உப செயலாளராகவும், திரு. இ. இராசையா பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு. எம். கே. இளையப்பு, திருமதிகள் இ. அன்னலிங்கம், செ. சின்னத்துரை, திருவாளர்கள் ஜே. ஞானப்பிரகாசம், ஜே. யோசவா, ஜே: தம்பிஐயா, கே. இராசன், கே. வேலுப்பிள்ளை, இ. நவரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலை அபிவிருத்தியின் சம்பந்தமான சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

---

# "மக்கள் மத்தியிலுள்ள குறைபாடுகளை பொதுஸ்தாபனங்கள் நீக்க வேண்டும்"

[கோண்டாவில்]

"எமது பகுதியில் பல்வேறு வகையான சமூக பொது ஸ்தாபனங்கள் இருந்தபோதிலும் அவைகள் போதியளவு மக்களிடையே தொண்டாற்றவில்லை. பூரணமாக மக்கள் மத்தியில் உள்ள குறைபாடுகளை நீக்க ஒவ்வொரு பொதுஸ்தாபனங்களும் ஈடுபடவேண்டும். இதன்மூலமே சரியான நோக்கை ஒவ்வொரு பொதுஸ்தாபனங்களும் அடையமுடியும். பதவிகள் கிடைப்பதுடன் செயல்பாடுகளும் முடிவடைந்துவிட்டது என்று யாரும் கருதக்கூடாது."

இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நல்லூர் தொகுதிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் தலைவர் திரு க. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து பேசிய உதவி அரசாங்க அதிபர் "நான் இப்பதவிக்கு வந்த கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் எண்ணாயிரம் தென்னங்கன்றுகளையும், ஐயாயிரம் வரையிலான வழக்கன்றுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளேன். இவைகள் உரிய முறையில் பொதுஸ்தாபனங்களால் பெற்றுப் பயன்படுத்தப்படவில்லை. என்றுகூறினார்.

கொக்குவில் கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. பொ. சின்னத்துரை பேசுகையில் "எமது பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றம் சரியான முறையில் இயங்கவில்லை. காலை ஒன்பது மணிக்குச் சென்றாலும் கூட உத்தியோகத்தர்களைக் காணமுடியாதுள்ளது எமது பகுதியில் பல்வேறு வகையான சிரமதான வேலைகள் செய்யப்படவேண்டியுள்ளன. அதனை இத்தகைய இளைஞர்கள் செய்து முடிக்க வேண்டும் என்றும் கூறினார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் திரு. க. பேரின்பநாதன் பேசுகையில் அபிவிருத்தி யடைந்த நாடுகளுடன் அபிவிருத்தியடையாத நாடுகளை ஒப்பிடுவது போன்று யாழ்ப்பாணத்துடன் இப்பகுதியை ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கியுள்ளது இத்தகையநிலை தொடர்ந்தும் நிலவாது இளைஞர்களை நல்வழியில் மாற்றியமைப்பதுடன் அவர்களை வீட்டுத்தோட்டச் செய்கையிலும் ஈடுபடுத்த வேண்டுமென்றும் கூறினார்.

இளைஞர் சேவை அலுவலர் திரு. ஆனந்தன், விசேடசேவை அலுவலர் திரு. நா. நவரத்தினராசா ஆகியோரும் உரையாற்றினர்.

---

## வைத்திய அதிகாரியாக நியமனம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் புதிய பதிவு பெற்ற வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். கணேசலிங்கம் இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இரணைமடுக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

## பாதைகள் திறந்துவிடப்பட்டும் நான்கு அடி நீர் மேலாகப் பாய்கிறது

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்யும் பேய் மழையினால் இரணைமடுக்குளம் உடைப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.**

**பாதைகள் எல்லாம் திறந்து விட்டபோதிலும் 4 அடி மேலாக வான்பாய்கிறது.**

இரணைமடுக் குளத்தைச் சுற்றியுள்ள கண்டாவளை, முரசுமோட்டை, தருமபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, திருவையாறு பகுதிகளில் தாழ்ந்த பகுதியில் வாழும் சகல மக்களையும் உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

### ✯ பாடசாலைகளுக்கு விடுமுறை

கிளிநொச்சியில் பத்து பாடசாலைகளில் வெள்ள அகதிகள் தங்கியுள்ளனர். கிளிநொச்சி பாடசாலைகளுக்கு மறு அறிவித்தல்வரை லீவு வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள முறிப்புக்குளம், கந்தன்குளம் ஆகியவையும் உடைப்பு எடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### ✯ பத்தாயிரம் குடும்பங்கள் தஞ்சம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 10 000 குடும்பங்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர் திரு குமாரசாமி, மண் சாக்கு மூடைகளுடன் குளங்களின் உடைப்பை தடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அக்கராயனில் மட்டும் 25,000 ஏக்கரில் நெல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நெல் கதிர்கள் வெட்டப்படாமல் அப்படியே நீரில் மூழ்கியுள்ளன.

### ✯ பஸ் சேவைகள் பாதிப்பு

கண்டாவளையில் உள்ள பாலத்திற்கு மேலாக ஆறு அடி தண்ணீர் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல கிராமப்புற பஸ் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பிரதான வீதியில் மட்டும் பஸ் சேவை நடைபெற்று வருகிறது.

### ✯ அகதி முகாமில் வெள்ளம்

கிளிநொச்சியிலுள்ள பாதிக்கப்பட்ட அகதிகள் முகாம்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. கனகாம்பிகைகுளம் அகதிகள் முகாம் வெள்ளத்தினால் சூழ்ந்துள்ளது.

கனகாம்பிகை குளத்தில் 500 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. முரசுமோட்டையில் 500குடும்பங்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளன.

கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் பாடசாலை, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலை, ஜி. பி எம். பாடசாலை, சென் அந்தனிபாடசாலை, அக்கராயன்பாடசாலை ஆகியவற்றில் அகதிகள் தங்கியுள்ளனர்.

### ✯ படகு சேவை ஆரம்பம்

வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆஸ்பத்திரிகளில் போக்குவரத்துக்குப் படகுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பன்னங்கட்டி பகுதியிலும் படகுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு ஜெகநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. குணராசா திரு. எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டனர். பாடசாலைகளில் தங்கியிருக்கும் அகதிகளையும் சந்தித்து உடன் நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்,

### ✯ மழை நீடித்தால் அபாயம்!

நேற்று முன்தினம் இரவும், நேற்றும் தொடர்ந்து பெரும்மழை கிளிநொச்சிப் பகுதியில் பெய்துகொண்டிருக்கிறது.

இன்றும் மழை தொடர்ந்து பெய்யுமானால், கிளிநொச்சி பட்டினசபை பகுதியும் வெள்ளத்தில் மூழ்கும் என்று அஞ்சப்படுகிறது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுகொண்டிருக்கின்றனர். (க)

## இன்றைய பலன்

தை மாதம் 25ம் திகதி
8—2—84
புதன்கிழமை

**மேடம்:** மனதில் அமைதி குன்றும் அயலவர்களின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தை கிளறும் அவசர முடிவுகளை தவிர்த்துக் கொள்ளவும்.

**இடபம்:** கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாஷைகள் இன்று நிறைவேறும் உங்களுக்கு உதவமற்றவர்கள் முன் வருவர்.

**மிதுனம்:** அமைதிக்கு பங்கம் ஏற்படும். நெருங்கிய ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படலாம். குறைகேட்க நேரிடும் கடமையில் தடைகள் தோன்றும் பிணிக்குஇடம் கொடாது நடக்கவும்.

**கடகம்:** கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு நல்ல நாள். சிலருக்கு தாய் வழியால் தனமும் சேரும்.

**சிங்கம்:** வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளம் நிறைந்ததாகக் காணப்படும். தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் சுப தினம்.

**கன்னி:** இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. அதிகப் பேச்சை தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது.

**துலாம்:** களத்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. காதலர் வாழ்க்கையில் திருப்பமான சம்பவங்கள் இடம்பெறும். புத்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

**விருட்சிகம்:** விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் உருவாகும். மயக்கும் மொழிகளால் மனத்தை இழக்க நேரிடும் இன்று சும்மா இருப்பதே சுகம்.

**தனுசு:** தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் பிறக்கும் பொதுப் பணிகளின் மூலம் பொதுமக்கள் ஆதரவு உண்டு.

**மகரம்:** உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். வெளியிடத்தில் இருந்து வரவேற்கத்தக்க செய்தி கிட்டும்.

**கும்பம்:** வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பலவழிகளிலும் முயற்சி செய்வீர் புதிய தொழிற்துறை ஒன்றில் வாய்ப்புக்கிடைக்கும் முன்னேற்றம் உண்டு.

**மீனம்;** அணிகர்கள் அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும் வீணான சிந்தனையின் மூலம் வேதனைப்படுவீர்கள். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்


## பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ்க்காணும் பாடங்களுக்கு
செய்முறை விரிவுரை உட்பட அடுத்த வகுப்புகள்
**11-02-84ல் ஆரம்பம்**

(அ) மின் இணைப்பு
(Eectrical Wiring)
— 1 மாத காலம்

(ஆ) மின் பொறியியல் வேலைகள் டிப்புளோமா
(Eectrical Engineering Works Diploma)
— 6 மாத காலம்

(இ) நீர் குழாய் இணைப்பு
(Plumbing)
— 1 மாத காலம்

(ஈ) கொம்பியூட்டர் புறேகிறுமிங்
(Computer Programming)
— 6 மாத காலம்

(உ) ஆங்கிலம் (SpokenEnglish)

இந் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் 10-2-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.
மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்

பதிவாளர்,
பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


## திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழாவை முன்னிட்டு அன்னதானம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு அகில இலங்கை உள்ளூராட்சித் திணைக்களத்தில் இம் மாதம் 28, 29, 30-ம் திகதிகளில் உள்ளூராட்சி திணைக்கள மடத்தில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு உள்ளூராட்சித் திணைக்கள அன்னதானசபை தலைவரும், மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது!

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவில் கலந்து கொள்ளும் யாத்திரீகர்களுக்கு அன்னதானம் வழங்குவதுடன் காலையில் கோப்பியும், பகலில் குளிர் பானமும், இரவில் தேநீரும் வழங்கப்படும்.

யாத்திரீகர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்குத் தேவையான நிதி உதவியை இலங்கையிலுள்ள மாவட்ட அபிவிருத்திசபைகள், நகரசபை, பட்டினசபை, உப அலுவலகங்கள் என்பன வழங்கவுள்ளன என்றார்.

## வெங்காயச் செய்கை அழிவு

(பண்டத்தரிப்பு)

இப்பகுதியில் பெய்துள்ள பெருமழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு விவசாயிகளின் வெங்காயச்செய்கையை முற்றாக அழித்து விட்டது.

வெங்காயப் பயிர்கள் யாவும் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளதால் ஒவ்வொரு விவசாயிக்கும் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளது.

மற்றிய நிலையிலுள்ள நெல் வயல்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி - ஸ்ரீவித்யா
இமயம்
(புதிய வண்ணப் பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் —லதா
சிரித்து வாழவேண்டும்
(கலர் - புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-30,
எம்.ஜி.ஆர்.—ஜெயலலிதா
அன்னமிட்ட கை

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
56-வது நாளாக
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்

9-2-84 வரை
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(புதிய பிரதி-கலர்)

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-15. 4-45, and
7-00 P. M.
CAPTAIN AMERICA
STARRING
Christopher Lee.
Reb, Brown,
Lanawood
Action Packed Thrill
Color

ஹரன் (யாழ். நகர்)
பஸ்சேவை இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலைக் காட்சி 6 மணிக்கு ஆரம்பமாகும். அழகிய மலேயா நாட்டின் இயற்கைப் பின்னணியில் "வேண்டும் வேண்டும் உங்கள் உறவு" என்று கானமிசைத்த இளங்காதலரின் கதை
சிவாஜி, ஸ்ரீப்பிரியா, நடித்த
வசந்தத்தில் ஓர் நாள்
(ஈஸ்மன் கலர்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
நீதிக்கு தலைவணங்கு

கடைசி வாரம்
வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும் கீதம்
(ஈஸ்மன் கலர்)
பஸ்சேவை இரவு 9-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாலைக்காட்சி 6-00 மணிக்கு ஆரம்பமாகும்.


## நூல் விமர்சனம்

நூல்: அறவழி
வெளியீடு: அறவழிப் போராட்டக்குழு சாவகச்சேரி.
விலை: 5 ரூபா.

அன்பு - அஹிம்சை - எளிமை ஆகிய குறிக்கோள்களுடன் செயற்படும் 'அறவழிப் போராட்டக்குழு' நிறுவனம் இன்றைய மனிதசமுதாயம் அன்பின் அடிப்படையில் தன் வாழ்வை அமைக்க செய்வதற்காக இந் நூலை வெளியிட்டுள்ளது.

அறவழிப் போராட்டம், அறவழியின் பொருள், போருக்கு மாற்றாகும் புதிய அறவழிப் போராட்டம் அறவழியில் இணங்கச் செய்தல் பயிற்சியின் தேவை, பயிற்சிமுறை, அறவழியும் தனிமனிதனும், மார்க்கஸியமும் அறவழியும் ஆகிய எட்டுப் பிரிவுகளாக இந்நூல் அமைந்துள்ளது. 'வால்டர் லிப்மன்' 'மகாத்மாகாந்தி' 'பாக்' 'ஸ்டியன் கிஸ்' 'துரண்ட்விக்' முதலிய நல்லறிஞர்களின் சிந்தனைக் கருத்துக்கள் ஆங்காங்கேமிளிர அறவழியின் பெருமையும் அவசியமும் இந் நூலில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

'சுய மரியாதை சுயமுக்கியத்துவமாக மாறக்கூடாது' உண்மையை ஒத்துக் கொள்வதால் மதிப்புக் குறையாது சமுதாயத்தில் அவன் வகிக்கும் நிலை பாதிக்காது என்று அறவழிவாதி எதிரிக்கு உணர்த்துகின்ற அப்பொழுது எதிரியிடமும் மனமாற்றம் ஏற்படுகிறது.

"சுதந்திர உலக சமாதானமோ நேரடியாகப் பெறக்கூடியதன்று. ஒருவருக்கொருவர் நம்பிக்கை, மதிப்பு, கூட்டுறவு இவற்றைக் கடைப்பிடித்தால் மட்டுமே பெறமுடியும்" இப்படியான ஒவ்வொருவரும் தம்மனச்சான்றுக்கமைய ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களைப் பக்குவமாகப் படிப்பவர் மனதில் நிலைநிறுத்தும் தன்மையுடையதாக அமைந்துள்ளது இந்நூல்.

இருபது பக்கங்களுடைய இந் நூல் நூறு பக்கங்கள் கொண்ட தரமான நூலொன்றைப் படித்த நிறைவை உண்டுபண்ணுகின்றது.

தி. பொன்னம்பலவாணர்.


7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மங்கையர் மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
மோகன்... பூர்ணிமா
பயணங்கள் முடிவதில்லை

ராஜா (யாழ்நகர்)
கடைசி இரண்டு தினங்கள்
நல்லநேரம்

10-2 84 வெள்ளி முதல்
இந்தியாவில் முதல்முறை திரையிட்டபொழுது தடைசெய்யப்பட்டு மீண்டும் திரையிட்டபொழுது 175 நாட்களுக்கு மேல் வசூலில் சாதனை நிலைநாட்டிய படம்.



கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும் கோகிலா
(ஈஸ்மன் கலர்)
தினசரி 10-30. 2-30, 6-00
9-00
இசைக்கவியின்
இன்பக் காவியம்


ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட

# ஊழியர்கள்மீது பழிவாங்கல் நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது

## பொது நிர்வாக அமைச்சு செயலாளர் இணைப்புக் குழுவிடம் உறுதி

(யாழ்ப்பாணம்)

இதுவரையும் வேலைக்குத் திரும்பாத ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மீது வேலை நீக்கமோ அல்லது எவ்விதமான பழிவாங்கல் நடவடிக்கைகளோ மேற்கொள்வதற்கு அரசாங்கம் எவ்விதமான தீர்மானங்களும் கொண்டிருக்கவில்லை இதற்கு முரணாகத் திணைக்களத் தலைவர்களோ கூட்டுத்தாபன அதிகாரிகளோ பாதிக்கப்பட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கமுடியாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு டி பி. சிறிவர்த்தனா அவரைச் சந்தித்த பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுத் தூதுக்கோஷ்டியிடம் உறுதி அளித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு முன்னுரிமைப் படி தயாரித்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பபட்ட பாதிக்கப்பட்ட ஊழியர் இடமாற்றப் பட்டியலின் அடிப்படையில் வட. கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்கள் இவ்வூழியர்கள் மூலமே நிரப்பப்படும் என திரு. சிறிவர்த்தனா உறுதியளித்துள்ளார். இவ் ஊழியர்களின் இடமாற்றத்தை முன்னிட்டுப் பெரும் இடமாற்றத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதையும் திரு. சிறிவர்த்தனா சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் இடமாற்றத் திட்டத்தை ஒரு பூரணமான நடவடிக்கையாக மேற்கொள்வதற்காகப் பொருத்தமான இடங்களில் ஊழியர், கோப்பு எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்குபொதுநிர்வாகஅமைச்சு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமெனத் திரு. சிறிவர்த்தனாஉறுதியளித்தார்

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் நீண்டகாலப் புனரமைப்பிற்கு ஓர் நீண்டகாலப் பாரியத் திட்டம் ஒன்றைத் தயாரித்துப்புனர்வாழ்வுஅளிப்பதற்கு திரு சிறிவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பாக இதுகாலவரையும் தீர்க்கப்படாதிருக்கும் பிரச்னைகளையொட்டிப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக கொழும்பு சென்ற தூதுக்குழுவில் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுத்தலைவர் திரு. வே இராஜசிங்கம். செயலாளர் திரு ஐ தி. சம்பந்தன் உட்பட ஐவர் இக்குழுவில் அங்கம் வகித்தனர் இக்குழு மற்றும் பல அமைச்சர்களையும், திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்துப் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பிரச்னை பற்றிக் கலந்துரையாடியது. (வெ)

## வேம்படி மகளிர் கல்லூரி மூன்று பரிசுகள் பெற்றது

(யாழ்ப்பாணம்)

இலவசப் பாடப் புத்தக விநியோகத்திட்டத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கல்விச் சேவைகள் அமைச்சு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மொத்தம் ஐந்து பரிசுகள் கிடைத்தன அவற்றுள் மூன்று பரிசுகளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பெற்று முன்னணியில் நிற்கின்றது.

கனிஷ்ட பிரிவில் நாடகம் எழுதும் போட்டியில் முதலாவதாக செல்வி ஜீவாணி சிவஞானசுந்தரமும், கனிஷ்ட பிரிவில் சிறுகதை எழுதும் போட்டியில் முதலாவதாக செல்வி சுஜாத்தா சிவயோகசுந்தரமும், சிரேஷ்ட பிரிவில் சிறுகதை எழுதும் போட்டியில் இரண்டாவதாக செல்வி என். மாலினியும் பரிசு பெற்றுள்ளனர்.

### ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நாட்டுவளம் [ஆங்கிலம்] |
| 6-05 | ஆங்கில நிகழ்ச்சி |
| 6-30 | பொம் மலாட்டம் (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் [தமிழ்] |
| 7-15 | கலை அரங்கம் |
| 7-45 | சிங்கள நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 8-35 | திமுத்து முத்து (சிங்கள நாடகம்) |
| 9-05 | ஹரிச்சந்திரா (தமிழ் படம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | தமிழ்த்திரைப்படத் தொடர்ச்சி |
| 10-30 | உலகச் செய்தித் தலைப்புகள் |
| 10-35 | திரைப்படத் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு |

### புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ் ரிம்மர் மண்டபத்தில் தலைவர் திரு. யே. ஜீ. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது

செயலாளர், பொருளாளர் ஆகியோரின் வருடாந்த அறிக்கையைத் தொடர்ந்து புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. யே. ஜீ. அரசரத்தினமும், பொதுச் செயலாளராக அருட்திரு எஸ். என். சகுணனந்தன் அடிகளாரும், பொருளாளராக திரு ஜீ. டபிள்யூ அன்னப்பாவும்' நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை ஆகிய பிரிவுகளிலிருந்து தலா மூவர் அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க

## மின்தறி ஆலையை மூடுவதற்கு இயக்குநர்சபை தீர்மானம்

### ஊழியர் சங்கம் ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறி ஆலையை நஷ்டம் காரணமாக மூடிவிடுவதற்குச் சங்க இயக்குநர் சபையினர் செய்த முடிவுக்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக்கிளை பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கிளைத்தலைவர் திரு. எம். அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற கிளையின் விசேட செயற்குழுக்கூட்டத்தில் மின்தறியாலை மூடப்படவிருக்கும் விவகாரம் குறித்தும், அதனால் அங்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றிவரும் சுமார் 50க்கும் அதிகமான பணியாளர்களின் எதிர்காலம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. கிளையின் தூதுக்குழு ஒன்று இது தொடர்பாகச் சங்க நிர்வாகத்துடன் விரைவில் பேச்சுவார்த்தை நடாத்துவதென்றும் அதனைத் தொடர்ந்து கறுப்புப்பட்டி அணிந்து வேலை செய்யும் இயக்கம் மறியல் போராட்டம் ஆகியவற்றை ஒழுங்குசெய்து நடாத்துவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடங்களாக பதிவுபெற்ற வைத்திய அதிகாரியாக (ஆர். எம். பி) கடமையாற்றிய டாக்டர் கே. சுப்பிரமணியம் இம்மாதம் 4ம் திகதி தொடக்கம் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அனுராதபுரம், குருநாகல், புத்தளம், வவனியா ஆகிய சுகாதாரப் பிரிவுகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் 35 வருட காலம் திரு சுப்பிரமணியம் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச்சங்கம் பிரிவுபசார விழாவொன்றை நடத்தியது.

### விசேட ஆராதனைகள்

(பண்டத்தரிப்பு)

இல்லாலை சாந்தை லூர்த்து மாதா ஆலயத்தில் பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் இம்முறை விசேட ஆராதனைகளை நடாத்துவதற்குச் சில்லாலை புனித. கதிரை மாதா ஆலய பரிபாலனசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்பிரகாரம் இன்று தொடக்கம் பூசைகள் ஆரம்பமாகவுள்ளன, எதிர்வரும் 10-ம் திகதி கதிரைமாதா ஆலயத்திலிருந்து நடைபவனியாக லூர்த்து மாதா ஆலயத்திற்குச் சென்று அங்கு விசேட திருப்பலி பூசைகள் ஒப்புக்கொள்ளப்படும் என்றும், 11-ம்திகதி பெருநாட் பூசையும், திருச்சுரூப பவனியும் இடம்பெறும் என்றும் சில்லாலை புனித. கதிரைமாதா ஆலய பரிபாலன சபையின் செயளாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார். சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு இருதயதாஸ் அடிகளார் பூசைகள் நிறைவேற்றுவார்.

## சுதந்திரக்கட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர். ஜூலை கலவரகாலத்தில் எமக்கு நிகழ்ந்த துன்பங்கள் பற்றி அவர்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர்

### இரகசியங்களை வெளியிடவில்லை

"எமது பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் ஆர்வம்கொண்டுள்ளனர் ஆனாலும் எங்களது துன்பங்கள் பற்றி இந்தியப் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில் சர்வகட்சி மாநாட்டுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் எந்த விதமான இரகசியங்களை நான்வெளியிடவில்லை. தப்பித் தவறி மாநாடு பற்றி எந்தக் கருத்தையும் வெளியிட்டுவிடக் கூடாது என்பதில் நான் மிகவும் அவதானமாக இருந்தேன்.

'இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தினாலும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட தூதுவர்திரு. ஜி.பார்த்தசாரதியின் தளராத முயற்சிகளினாலுமே தமிழர் விடுதலைக்கூட்டணி சர்வகட்சிமாநாட்டில் கலந்துகொண்டது பலரறிந்த விஷயம்.

### புதுடில்லி சென்றது ஆலோசனைநடத்தவல்ல

"இந்த நிலையில் சர்வகட்சி மாநாட்டு நடவடிக்கைகள் குறித்து திரு. ஜி பார்த்தசாரதிக்கு நாம் தெரியப்படுத்த வேண்டியது இயற்கையே.

"நானும் திரு ஆர். சம்பந்தனும் டில்லி சென்றது யாருடனும் ஆலோசனைநடத்த அல்ல. மாநாட்டின் முன்னேற்றம் குறித்து திரு ஜி பார்த்தசாரதியிடம் தெரிவிக்கவே நாம் புதுடில்லி சென்றோம்.

"சென்னையில் நாங்கள் தங்கியிருந்தபோது, மரியாதை தெரிவிக்கும் முகமாக, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரனையும் ஏனைய தலைவர்களையும் சந்தித்தோம். இவர்கள் எமது நெருங்கிய நண்பர்கள். அதுமட்டுமல்ல; ஜூலைக் கலவரகாலத்தில் நாம் அடைந்த துன்பங்களின் போது எமக்காகக் குரல் கொடுத்தவர்கள் அவர்கள்.

"நிலைமை இவ்வாறிருக்க, சர்வகட்சி மாநாட்டிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெளியேறுவதற்கு நம் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுவது ஏற்கக்கூடிய தொன்றல்ல

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி எடுத்த மேற்படி முடிவு, துர்அதிர்ஷ்டமானது. சமாதானம் சௌஜன்யத்தைக் கருத்தில் கொண்டு தங்களது முடிவை ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி மீள் பரிசீலனைசெய்யும் என்று நான் நம்புகின்றேன்".

## ஒரே குழுவில்...

[1-ம்பக்கத் தொடர்ச்சி

இரு குழுக்களாகவே கலந்து கொண்டன.

கூட்டணி, காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகள் மட்டுமே ஒரு குழுவாகக் கலந்துகொண்டன.

இந்துசமய பிரதிநிதிகள்குழுவும் இரண்டு குழுவாக ஆறு பேர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே சர்வகட்சி மகாநாடு இரு குழுக்களாக பிரிந்து பேச்சுவார்த்தை நடத்துவது என்று தீர்மானித்ததைத் தொடர்ந்தே நேற்று முன்தினம்கட்சிகளின் இரு குழுக்கள்பங்குபற்றின. (இ-கு)

## ரூ. 4 லட்சம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ள 20 000 அகதிகளுக்கு ஒரு நாளைக்கு பத்து ரூபாவிற்கு மேற்படாமல் நேற்று முதல் இரு தினங்களுக்கு உணவு வழங்க சமூக சேவைப் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ளனர் உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவை அலுவலர்கள், பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் அகதிகளுக்கு உணவுகள் வழங்கிவருகின்றனர்.

அச்சுவேலி, இடைக்காடு, பகுதிகளில் உருளைக்கிழங்கு, வெங்காயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மிளகாய்க்கன்றுகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கி அழுகி விட்டதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரியாலை, மற்றும் பல இடங்களில், நெற்கதிர்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இருபாலை, கோப்பாய் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் அயலில் உள்ள பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது யாழ்ப்பாணத்தில் உள்ள பல சிறு குளங்கள். மேவிப் பாய்கிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு வரை மழை விட்டு விட்டு பெய்துகொண்டிருந்தது இன்றும் மழை தொடர்ந்து பெய்யுமானால், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்படும்.

## வெள்ள அகதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

20 ஆயிரம் மக்களும் வவுனியா, முல்லைத்தீவு மன்னாரில் சுமார்50 ஆயிரம மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு:

பொலன்றுவ மாவட்டம் ரூபா 7 லட்சம்.

யாழ்ப்பாண மாவட்டம் ரூபா 2 லட்சம்.

வவுனியா மாவட்டம் ரூபா 1 லட்சம்.

திருமலை மாவட்டம்: ரூபா 1 லட்சத்து 50 ஆயிரம்.

மற்றைய மாவட்டங்கள் தங்கள் சொந்தப்பணத்தையே செலவிடவேண்டுமென கேட்கப்பட்டுள்ளன, (கு)

## வானொலியில் ஜி.ஜி. நினைவுரை

(கொழும்பு)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தை யொட்டி நாளை இலங்கை வானொலியின் தமிழ், ஆங்கில சேவைகளில் நினைவுப் பேருரை ஒலிபரப்பப்படவுள்ளது.

தமிழ்ச்சேவையில் இரவு9-30 மணி முதல் 9-45 வரை திரு. ஏ. குமாரவேலும், ஆங்கில சேவையில் இரவு 9-00 முதல் 9-10 வரை திரு. எஸ். சரவணமுத்துவும் நினைவுப் பேருரை நிகழ்த்துவர். (இ-கு)

## இப்படியும் நடக்கிறது

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான 'லொறி' ஒன்று நேற்று நகரின் மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து குப்பைகளை 'விழுங்கி'க் கொண்டிருந்தது.

நகரின் ஓரிடத்தில் இந்த லொறி வந்தபோது அசைய முடியாது போய்விட்டது. காரணம் போக்குவரத்துத் தடை.

லொறிக்குப் பின்னால் நின்ற ஒரு வாகனத்துக்குப் பொறுக்கமுடியவில்லைப் போலும். லொறி வழிவிடவில்லை என்று அந்த வாகனத்தில் வந்தவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்துவிட்டது!

வாகனத்திலிருந்தவர்கள் கீழே இறங்கினார்கள். 'லொறி'யின் டயர்களின் காற்றைத் திறந்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

குப்பை லொறியில் கடமையாற்றியவர்கள் சும்மா இருப்பார்களா?

குப்பை ஏற்றுவதை 'அம்போ' என்று நிறுத்திவிட்டு மேற்பார்வையாளரிடம் சென்று புகார் செய்தனர்!

காதிலே கேட்டது: அந்த வாகனத்தின் பெயர் 'ஜீப்'.

★

சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு தனிச் சிங்களத்தில் ஒரு கடிதம் வந்தது

மலேசிய பென்ஷன் பணம் சம்பந்தமாக எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில், "உமது ஒய்வூதிய நிதலைப் பணத்தை யாழ். செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்" என்று குறிப்பிட்டிருந்தது

இதில் நம்பமுடியாத விஷயம் என்னவென்றால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்துதான் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

★

மன்னிக்கவும் இது ஒரு 'கிசு கிசு' செய்தி,

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஒரு பெண் அழகான ஓர் குழந்தையை சில தினங்களுக்கு முன்னர் பெற்றெடுத்தான் விஷயம் இதுதான்! ஒன்றரை வருடத்துக்கு முன்னர் இப்பெண் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் குடும்பக்கட்டுப்பாட்டுக்குள்ளாகி, ரொக்கப்பணம் 500 ரூபாவும் பெற்றுக்கொண்டவர்!

"ஊடுருவி"

## ஜி. ஜி. நினைவு தினம்

(யாழ்ப்பாணம்) அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் நினைவுதினத்தை யொட்டி நாளை 9ம் திகதி காலை விசேட வழிபாடு நடைபெறும். கிரஸ் தலைமைக் காரியாலயத்திலுள்ள அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செய்யப்படும். நாளை மாலை தமிழ்க் காங்கிரஸ் ... நாளை பிற்பகல் குருநகரில் கூட்டம் நடைபெறும். (க)

## மரண அறிவித்தல்

### திரு. சீனிவாசகம் நடராசா

(ஏழாலை கிழக்கு)

திரு. சீனிவாசகம் நடராசா காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுந்தரர் சீனிவாசகம், நாகம்மா சீனிவாசகத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுவின் அன்புத் துணைவரும், திருவாளர்கள்; இரத்தினம், கனகரத்தினம், காலஞ்சென்ற சிவலிங்கம், திருமதி சரசுவதி சதாசிவம் அவர்களின் அன்புச் சகோதரரும், திரு கு. சதாசிவம் அவர்களின் மைத்துனரும். திரு. சந்திரசேகரம், மருதலிங்கம், இராசசூரியர், இராசபவன், இராசசிறீ, விமலாதேவி, அல்லிராணி, சுபத்திராதேவி, சத்தியராணி, சத்தியபாமா, இராசசிவா, கலைவாணி ஆகியோரின் தகப்பனாரும், திரு. அ குணரத்தினம், திருமதி சந்திரசேகரம், திருமதி மருதலிங்கம் ஆகியோரின் மாமனாரும், குமணன், சஞ்சீவன், கரிகாலன், திருமாவளவன், விஜயவாணி, ஏழிலினி, கலைச்செல்வி, மலர்வண்ணன், ஜெயராமன், ஜெகன்மோகன், சித்திராதேவி, காவேரி, கோகிலா, பிரபாகரன், கரிகரன், சிறீகரன், அமிழ்தினி, வரதட்சினி ஆகியோரின் பாட்டனருமாவார். இறுதி ஊர்வலம் அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று புதன் (08-02-84) பிற்பகல் இரண்டு மணியளவில் புறப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

ந. சந்திரசேகரம், விஜயா அழுத்தகம்

551, காங்கேசன்துறை வீதி—யாழ்ப்பாணம்.

(678)

## மரண அறிவித்தல்

### திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை

(குருகுலம்)

திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை காலமானார். இவர் அலெக்சாந்திரீனாவின் அன்புக் கணவரும், ஏபிரகாம் லிங்கன் (மத்திய கல்லூரி), புஷ்பம் வின்னராஜா (A S R. மட்டக்களப்பு பரிவர்த்தனை நிலையம்), பிரான்சிஸ் இம்மானுவேல் (உப தபால் அதிபர் பாஷையூர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி, B. J. H. வின்னராஜா, றெஜினா ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 8-02-84 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல 27/1, 3-ம் குறுக்கு வீதி, பாஷையூரில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

677

## மரண அறிவித்தல்

### வே. கார்த்திகேசுப் பத்தர்

மட்டுவில் வடக்கு வேலுப்பிள்ளை கார்த்திகேசுப்பத்தர் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், மூத்தரின் சகோதரரும், உமையம்மா, நாகம்மா, அன்னபூரணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, காலஞ்சென்ற அப்பாத்துரை, திருநாவுக்கரசு (மேற்பார்வையாளர் மனோரியாததடை இலக்கம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார் இவரின் ஈமக்கிரியைகள் 8-2-84 புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு வேம்பிராய் மயானத்தில் நடைபெறும் உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கின்றோம்.

(679)

## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் சிவக்கொழுந்து

தாவடி, கொக்குவிலைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் சிவக்கொழுந்து காலமானார். இவர் நாகரத்தினத்தின் அருமைக் கணவரும், சிவலிங்கம், தேவராசா, திருமதி விஜயலக்ஷ்மி மதிமுகராசா ஆகியோரின் தகப்பனுமாவார் தகனக்கிரியை தாவடி மயானத்தில் இன்று 8-2-84 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும். தகவல்: பொன். மதிமுகராஜா

(676)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu- P. O. Box: 49. Telephone: 22389 24126.